www.xtrapapers.com

**Cambridge International Examinations**
Cambridge Ordinary Level

**TAMIL** **3226/02**

Paper 2 Translation and Reading Comprehension **May/June 2018**

**1 hour 30 minutes**

INSERT

**READ THESE INSTRUCTIONS FIRST**

This Insert contains the reading passage for use with the Question Paper.

You may annotate this Insert and use the blank spaces for planning.
This Insert is **not** assessed by the Examiner.

This document consists of **3** printed pages and **1** blank page.

KI 143160/3
© UCLES 2018

CAMBRIDGE International Examinations

[Turn over

www.xtrapapers.com



Read the following passage carefully and then answer, briefly and in **Tamil**, **Questions 3–12** on the Question Paper.

ஒரு வயதான பெண்மணி, தன் மகன் வெளிநாட்டுக்குப் போன பிறகு அந்த வீட்டில் தனியாக இருக்க மிகவும் பயப்பட்டார். ஆனால் அவருக்கு வீட்டைக் காலி செய்து விட்டு, வெளிநாட்டுக்குப் போய் தன் மகன் அல்லது மகளுடனும் இருக்க விருப்பமில்லை. வீட்டின் பின்புறம் இருக்கும் சிறிய தோட்டத்திற்குத் தண்ணீர் விடுவது, வங்கிக்குப் போய் பணம் கட்டுவது, கடைகளுக்குத் தனியாகப் போய் சாமான்கள் வாங்குவது ஆகிய வேலைகள் அவருக்குப் பிடிக்காவிட்டாலும் அவளுடைய கணவர் செய்த சில வேலைகளைத் தான் கற்று கொள்ள வேண்டும் என்று தீர்மானம் செய்தார். முதலில் மின்சாரத்திற்குத் தவறாக வங்கியில் பணம் கொடுத்தல், சமையல் அறையில் குழாயை மூடும் போது உடைத்தல் ஆகிய தவறுகளைச் செய்தார். ஆனால் முதலில் அவர் சில தவறுகள் செய்தாலும் எப்படியும் கற்றுக் கொள்ள வேண்டும் என்று தீர்மானம் செய்தார். பிறகு தன் மகனுக்குத் தெரிந்த வேலை செய்பவரைத் தொலைபேசியில் கூப்பிட்டார். அந்தப் பெண்மணிக்கு எட்டாதபடியால் வீட்டின் மாடிப்படியின் மேலே இருக்கும் லைட் பல்பை மாற்றுவது, சமையல் அறையில் உள்ள குழாயை சரி செய்வது, குளிக்கும் அறையில் உள்ள பூட்டை சரி செய்வது –ஆகிய வேலைகளை எல்லாம் சரி பண்ணச் சொல்ல வேண்டும் என்று எழுதிக் கொண்டார். வேலை செய்பவர் வந்து எல்லா வேலைகளையும் ஒரு மணி நேரத்தில் முடித்து விட்டார்.

வேலை செய்தவர் பணம் வேண்டும் என்று கேட்ட போது தான், தன்னிடம் பணம் இல்லை என்று ஞாபகம் வந்தது. ஆனால் அவருடைய மகன் சில சமயங்களில் ஒரு காசோலை (செக்) கொடுப்பார் என்றும் ஞாபகம் வந்தது. அவர் இதற்கு முன்னால் காசோலை (செக்) எழுதாத படியால் தன்னுடைய மகன் இதற்கு முன்னால் எழுதிய ஒரு காசோலையைப் (செக்கைப்) பார்த்து, முதலில் வேலை செய்பவரின் பெயர், கொடுக்க வேண்டிய பணம், கடைசியில் தன் கையெழுத்து என்று மெதுவாக ஒவ்வொன்றாக எழுத ஆரம்பித்தார். பிறகு எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்தார். பிறகு செக்கை வேலை செய்தவரிடம் கொடுத்து சரியாக இருக்கிறதா என்று பார்க்கச் சொன்னார். வேலை செய்தவர் எல்லாம் சரியாக இருக்கிறது என்று சிரித்துக் கொண்டே சொன்னார். அந்தப் பெண்மணி மிகவும் பெருமிதத்துடன் இது தான் அவர் எழுதிய முதல் (காசோலை)செக் என்று கூறினார். காசோலை (செக்) கொடுப்பதற்கு முன்னால் பல்பு மாற்றியது, குழாயைச் சரி பண்ணியது. குளிக்கும் அறையில் பூட்டை மாற்றியது – எல்லா வேலைகளையும் சரியாகச் செய்து இருக்கிறானா என்று பார்த்தார். பிறகு வேலை செய்தவருக்கு நன்றி கூறி விட்டு காசோலையைக் (செக்கைக்) கொடுத்தார். பிறகு அவனைப் போகலாம் என்று கூறினார். வேலை செய்தவர் என்ன வேலை செய்ய வேண்டுமென்றாலும் தன்னைக் கூப்பிடலாம் என்று சொன்னான். வேலை செய்தவர் அந்தப் பெண்மணியிடம் அடுத்த தடவை தான் வரும்பொழுது பல்பை எப்படி மாற்றுவது என்பதைச் சொல்லிக் கொடுப்பதாகவும் கூறினார்.

© UCLES 2018

www.xtrapapers.com



வேலை செய்தவர் போன பிறகு அந்தப் பெண்மணி, ஒரு கோப்பை காப்பி போட்டு. அதைக் குடிப்பதற்குத் தன் ஆடும் நாற்காலியில் அமர்ந்து கொண்டார். இப்பொழுது தான் முதல் தடவை அந்தப் பெண்மணிக்குத் தன்னால் தனியாக இருக்க முடியும் என்ற தன் நம்பிக்கை வந்தது.

© UCLES 2018 

www.xtrapapers.com



BLANK PAGE

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge International Examinations Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cie.org.uk after the live examination series.

Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.

© UCLES 2018 